செ.வெ.எண்: 33 நாள்: 13.09.2021

# நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.வி.அருண்ராய்,இ.ஆ.ப.அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு.வி.அருண்ராய்,இ.ஆ.ப.அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 12.09.2021 மாலை 6.00 மணியளவில் நடைபெற்ற வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக மாவட்ட நிருவாகம் மேற்கொண்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் விரிவாக விளக்கப்பட்டது.

கூட்டத்திற்கு பின் மாவட்டத்தில் பருவமழையை எதிர்க்கொள்ள ஏதுவாக அனைத்துத்துறை அலுவலர்கள் அடங்கிய ஒருங்கிணைப்பு குழு வட்டம் மற்றும் ஒன்றியம் வாரியாக ஒருங்கிணைப்பு அலுவலர்கள் வெள்ள பாதிப்புகள் மற்றும் புயல் ஏற்படும் பட்சத்தில் பாதிக்கக்கூடிய பகுதிகளில் உள்ள பொதுமக்களை பாதுகாப்பாக தங்கவைத்திட பல்நோக்கு பாதுகாப்பு மையம், புயல் பாதுகாப்பு மையம், திருமண மண்டபங்கள் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும் என்றும், முதல் நிலை பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும் என்றும், கால்நடைகளை மீட்டு பாதுகாப்பது தொடர்பான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய கட்டுப்பாட்டு அறை 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. வி. அருண்ராய், இ.ஆ.ப. அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மாவட்ட வன உயிரின காப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,, பொதுப்பணித்துறை, மின் உற்பத்தி மற்றும் பகிர்மானத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மீன்வளத்துறை, சுகாதாரத்துறை, கால்நடை மற்றும் பராமரிப்புத்துறை, நகராட்சி நிர்வாகத்துறை உள்ளிட்ட மாவட்ட அளவிலான அனைத்து துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு:செய்திமக்கள்தொடர்புஅலுவலகம், நாகப்பட்டினம்.**